காசி இராமேஸ்வரம் வெண்பா அந்தாதி









பொற்கிழிக் கவிஞர்

அரு. சோமசுந்தரன்

பொன்முடி பதிப்பகம்

காசி இராமேஸ்வரம் வெண்பா அந்தாதி

"கவிஞர்கோ" "பொற்கிழிக் கவிஞர்"
"காசிஸ்ரீ" "கயிலைமணி"

அரு. சோமசுந்தரன் M.A.B.T. (அருசோ)

பொன்முடி பதிப்பகம்
123, முத்துப்பட்டணம், 3வது தெரு, காரைக்குடி-630001.

பொன்முடி: 89

முதல் பதிப்பு : ஆகஸ்டு 1986

இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2005

தயாரிப்பு : அருசோ அருணாசலம்

விலை ரூ. 5

கிடைக்கும் இடம்

வெற்றி புக் செண்டர்

29, புதுமண்டபம், மதுரை - 1. போன் : 2627839

Publishers :

Ponmudi Pathippagam

(Founded on 3.6.1963)

123 (New No.48) Muthupatnam III Street,

Karaikudi - 630 001. Sivagangai Dt.

Ph : 04565 - 238196. Cell : 9443138196

அச்சிட்டோர்:

மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 21.

முன்னுரை

இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரையாக 17-2-1983 அன்று 13 பேர் கொண்ட குழுவுக்குத் தலைமை தாங்கி நடந்து செல்லும் அரிய வாய்ப்பு இறையருளால் அமைந்தது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் வழியாக சுமார் 3000 கிலோ மீட்டர் தூரம் நடந்து வடகோடியில் கங்கைக் கரையில் உள்ள காசிக்கு 12-6-1983 காலை இனிதே சென்று சேர்ந்து காசிவிஸ்வநாதரை வணங்க வேண்டும். மாபெரும் ஆன்மீக வேள்வியில் எங்களை இருபதாம் நூற்றாண்டில் இறையருள் ஈடுபடுத்தியது. அவனே கதி என்று புறப்பட்டோம். அப்பொழுது பாதையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வெண்பாப் பாடினேன். 116 நாட்கள் எங்கள் நடைப் பயணம். 101 வெண்பாக்கள் பாடும்படியாக இறையருள் அமைந்தது. அன்று பாடிய பாடல்கள் இன்று பாராயணத்திற்கு உரியனவாக உள்ளன.

வழியில் சரியான உணவின்றிச் சோர்ந்திருந்த நேரத்தில்

"பாராளும் எங்கள் பருவத வர்த்தினி
தாராள மாகவே தா"

என்று பாடினேன். உடனே நண்பர்கள் மூலம் எங்கட்கு நிறைய உணவு கிடைக்கச் செய்த இறையருளை நினைத்து வியக்கிறேன். இப்பாடல்கள் பலித்தன. அந்த அனுபவங்களை அடியேன் எழுதி உள்ள "இராமேஸ்வரம் காசி நடைப்பயணம்" என்ற நூலில் பதிவு செய்திருக்கிறேன். 1983ஆம் ஆண்டில் முதன் முறையாகக் காசிக்கு பாதயாத்திரை சென்று வரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது.

1990ஆம் ஆண்டில் எங்கள் இரண்டாவது குழு காசிஸ்ரீ ஆர். வயிரவன் தலைமையில் சென்று வந்தது. 19 பேர் அந்தப் பேற்றினைப் பெற்றனர்.

1997ஆம் ஆண்டில் எங்கள் மூன்றாவது குழு காசிஸ்ரீ ந. காசிநாதன் தலைமையில் சென்று வந்தது. 22 பேர் அப்பொழுது இந்த வேள்வியில் ஈடுபட்டனர்.

2004ஆம் ஆண்டில் எங்கள் நான்காம் குழு காசிஸ்ரீ அழ. அழகப்பன் தலைமையில் சென்று வந்தது. 41 பேர் அந்தப் பேறு பெற்றனர்.

2011ஆம் ஆண்டில் எங்கள் ஐந்தாவது குழு கவிஞர் உ. தட்சணாமூர்த்தி தலைமையில் சென்று வரும். எங்கள் தேவகோட்டை திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழு டிரஸ்ட் மூலம் ஏழாண்டுக்கு ஒரு முறை இந்தப் பாதயாத்திரை வேள்வியினை நடத்தி வருகிறோம்.

எங்களைத் தவிரப் பலபேர் தனியாகவும், குழுவாகவும் இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை சென்று வந்துள்ளனர். எல்லோருக்கும் நான் எழுதி உள்ள நடைப்பயண நூல் நல்ல வழிகாட்டியாகப் பயன்படுகிறது. இந்த வெண்பா அந்தாதியினை எல்லோரும் வழிநெடுகப் படித்துப் பயன் பெற்றுளர். இதில் முதல் 2 அடி காசி பற்றியும், பின் 2 அடி இராமேஸ்வரம் பற்றியும் வர்ணிக்கின்றன.

இதனைப் படித்தால் காசி விஸ்வநாதரும், இராமேஸ்வரம் இராமநாதரும் கண்முன் தோன்றி அருள்புரிவர். இராமேஸ்வரத்தில் கடலாடி, காசியில் கங்கை ஆடிய பலன் கிடைக்கும். இந்தியத் திருத்தலங்கள் அனைத்தையும் வழிபட்ட பலன் உண்டு. படியுங்கள். பயன்பெறுங்கள். வாழ்த்துக்கள்.

அருசோ

காசி இராமேஸ்வரம் வெண்பா அந்தாதி

காப்பு

கடலாடும் ராமேஸ் வரம்காசி நின்று
நடமாடும் தெய்வம் நமையே - திடமாகக்
காப்பாற்றும் என்று கரம்கூப்பி வெண்பாவாம்
பூப்போட்டுச் செய்வோம் புகழ் 1

நூல்

புகழ்கின்ற கங்கை முடிமேல் அமர்ந்து
திகழ்கின்ற எங்கள் சிவமே - நிகழ்கின்ற
நீர்போற்றும் ராமேஸ் வரநாத! நீடுழி
ஊர்போற்ற ஈவாய் உயிர் 2

உயிரான எங்கள் வடகாசி நாத!
பயிரான எங்கள் பதங்கள் - வெயிலோடு
போராடி ராமேஸ் வரம்தொட்டு வந்திக்கத்
தீராத துன்பங்கள் தீர். 3

தீர்த்தனே! கங்கைத் திலகனே! காசிவாழ்
மூர்த்தியே! எங்கள் முதல்வனே! - கீர்த்தியால்
பாராளும் எங்கள் பருவத வர்த்தினி
தாராள மாகவே தா. 4

தந்தாலும் காசி தலையாரக் கும்பிட்டு
வந்தாலும் முக்தி வழங்கத்தான் - சிந்தாமல்
கொண்டாடி எங்கள் குலம்காக்கும் ராமேசா!
அண்டாமல் தீமை அடை 5

அடையாத நெஞ்சால் அழைக்கின்ற கங்கை
உடையானே! காசி உயிரே! - நடையாகக்
கோடி மணலேந்திக் கும்பிட்டுத் தீர்த்தமுடன்
பாடி வரநயனம் பார். 6

பார்க்கின்ற கங்கை பரமேசா! உன்னருளால்
ஆர்க்காமல் காக்க அருள்புரிக - தூர்க்காமல்
தெற்கு முனைவரைக்கும் தேன்கங்கை ஓடிவர
அற்புதமாய் ராமேசா ஆள் 7

(பாடல் 7 நடந்து சென்ற பொழுது பாதையில் குடிக்கத் தண்ணீர் கிடைக்காமல் தாகத்தால் அவதிப்பட்ட பொழுது, "விசுவநாதப் பெருமானே! காசியில் ஓடும் கங்கை தென்கோடி வரைக்கும் ஓடி வருமேயானால் தண்ணீர்ப் பஞ்சம் உண்டா" என்று எண்ணிப் பாடியது)

ஆளும் பதின்மூன்றாய் ஆண்டவனே! காசிக்கு
நாளும் இனிதாய் நடந்துவர - வேலும்
வழிகாட்டிச் செல்ல வடிவேலா! கோடி
எழில் காட்டிச் செய்வாய் இதம். 8

இதமாகக் காசி விசுவேசா! ஈர்க்கப்
பதமாக வந்து பணிந்தோம் - சதமாகக்
கோடிக் கரைபாடிக் கோயிலிலே நீராடிக்
கூடிக் களிக்க அருள் கூர்! 9

கூர்த்த மதியாய்! குளிர்கங்கைச் செம்பதியாய்
ஈர்த்தெம்மை ஆண்ட இயல்புடையாய்! - தீர்த்தமுடன்
மூர்த்தியாய் உள்ள முதல்தலமே ராமேசா!
நேர்த்தியாய்ப் பாதையெலாம் நீ. 10

நீயே இதயம் நினைவாக உள்ளதனால்
தாயே விசாலாட்சி தாளுற்றோம் - நோயேதும்
வாராமல் காத்து வரமருளி ராமேசா!
சீராக யாத்திரையில் சேர். 11

சேர்கின்ற காசிச் சிவமே விசாலாட்சி
ஆர்கின்ற உன்றன் அகல்மார்பம் - சார்கின்ற
பக்தர் களுக்குய்வு பாலிக்க ராமேசா!
நித்தம் அருள்புரிக நீடு 12

நீடு துயில்நீக்கும் நிர்மலனே! காசியெனும்
ஓடு புனல்சூழும் ஓங்காரா! - பாடுபடும்
மக்கள் களிகூர மாதவங்கள் வெற்றி பெற
இக்கணமே ராமேசா ஈ 13

ஈயும் அடிதாங்கி ஈர முடிதாங்கிக்
காயும் கனல்தாங்கும் கங்கேசா! - பாயும்
திரைவருடும் கோயில் திகழ்ஒளிரா மேசா!
குறையாமல் சக்தியெலாம் கூட்டு 14

கூட்டும் அடியார்கள் கொள்கையெலாம் காதாரக்
கேட்டு மகிழ்காசி சாலாட்சி! - நாட்டினிலே
உண்ண உணவும் உடையுமிலாப் பஞ்சமெலாம்
அண்ணல்ரா மேசா! அகற்று 15

அகற்றிடினும் தாயை அடையும் குழந்தை
மகத்துவமே! காசி மணியே! - இகத்தினிலே
குற்றம் குறைநீக்கிக் கொண்டாடி வாழ்விக்க
நற்றமிழே! ராமேசா! நாடு! 16

நாடு புகழ்காசி நாதனே! சாலாட்சி
யோடு திகழ்ஒளியே! ஓங்காரா - கூடும்
சமுத்திரங்கள் பாடிச் சதிராடும் ஈசா!
சமுத்திர நீருக்கோய் வேது? 17

வேதங்கள் பாடும் விசுவேசா! எங்களது
பாதங்கள் நோகாமல் பார்த்திடுக - மாதங்கள்
நான்கினிலே காசி நடந்துவர ராமேசா!
தீங்கின்றித் தந்திடுவாய் தெம்பு 18

தெம்பு தனைத்தந்து திட்டிவிடம் நீக்கிக்
கம்பாய் வருகின்ற கங்கேசா! - நம்பிஉனைத்
தேடி வருகின்றோம் திட்டிவிடம் நீக்கிதனுஷ்
கோடிக் கரைநாதா! கொள்! 19

கொள்ளும் பொருள்கோடி கொண்டவனே! காசியிலே
உள்ள விசுவேசா! உன்னடிக்குத் - தெள்ளமுதாம்
கோடித் திருநீரைக் கொண்டு வரும் நாங்களெலாம்
கூடி வரவாக்கு கூறு 20

கூறும் பெருமையெலாம் கொண்டவனே! கங்கையெனும்
ஆறு தலைக்கொண்ட ஆண்டவனே! - நீறிட்டுக்
கால்கள் நடந்துவரக் கையிரண்டும் வீசிவரப்
பால்போலும் ராமேசா! பார் 21

பாரில் புனிதம் பழங்காசி விஸ்வேசா!
சீரில் அமைந்து சிறப்பாக்கு - தேரில்
எழுந்தருளும் எங்கள் இராமேசா! அன்பாய்த்
தொழுகின்றோம் தந்திடுவாய் தோள் 22

தோளில் வலிமையுடன் தொண்டர்யாம் காசிவரக்
காலில் வலுதந்து காப்பாற்று - வேலின்
துணையோடு சென்று துயரின்றி மீள
அணைகாண்ரா மேசா! அருள்! 23

அருள்கண்ட காசி அலைகண்ட கங்கைப்
பொருள்கண்ட மேனிப் புனிதா! - இருள்கண்ட
வையத் திடும்பையெலாம் வற்றிடவே செய்திடுவான்
ஐயன் இராமேசன் ஆம். 24

ஆமென்னும் முன்னே அடியெடுத்துக் காசிக்குச்
சேமமுடன் சேரஅருள் செய்தவனே! - மாமனைக்குப்
பொன்னோடு நல்ல புகழோடு மீண்டுவரக்
கண்மணியே! ராமேசா! கா 25

காக்கும் பொருளனைத்தும் காசியிலே பாடிவர
ஆர்க்கும் திருக்கங்கை ஆடுவதை - ஈர்க்கும்
உளத்தாலே கண்டே உவகையுறும் கோடித்
தலத்தான் இராமநா தன் 26

தன்னேர் இலாத தனிக்கங்கை சூடியசீர்ப்
பொன்னே விசுவேசா! புத்தமுதே1 - மின்னனைய
பர்வத வர்த்தினியின் பாதங்கள் கண்டேத்தித்
தர்மம் நடந்தோமே தாள்! 27

தாள்கள் நடந்துவரத் தர்மங்கள் ஓங்கிவரக்
கோள்கள் அருள்புரிக விஸ்வேசா! - ஊழ்வினைகள்
எல்லாம் மறைய இனிப்பிறவி இல்லையெனச்
சொல்வாய் இராமேசா சூழ்ந்து 28

சூழ்ந்த இருளகற்றும் சோதிவடி வானவனே!
ஆழ்ந்த முடிக்கங்கை ஆண்டவனே! - ஏழ்பிறவி
தந்தாண்ட ராமேஸ் வரநாதா! தாழ்வின்றி
வந்தீய வேண்டும் வரம் 29

வரத்தாலே காசி வருகின்றோம் செம்மை
நிறத்தானே! எங்கள் நிமலா! - தரத்தாலே
சின்னஞ் சிறியோங்கள் செய்தவங்கள் வெற்றி பெறும்
மன்னவனாம் ராமேசன் மாண்பு 30

மாண்புடைய கங்கை மகேசா! உனதடியைக்
காண்பதற்கு வந்துள்ளோம் கால்நடந்து - வீண்பெருமை
பேசும் உலகத்தில் பேசாத ராமேசா!
தாசரது துன்பம் தகர் 31

தகர்க்கின்ற வெப்பம் தணிப்பவனே! கங்கை
உகக்கின்ற நெஞ்சம் உடையாய்! - சுகத்துடனே
நன்றே நடந்துவர நாயகனே! ராமேசா!
இன்றே அருள்க எமக்கு. 32

எமக்கே வடகாசி நாதன் இதயம்
சுமக்கும் இதயம் சுகமாம் - தமக்கே
அனைத்தும் எனச்சொல் அவனியில் கோடி
நினைத்தோம் இராமேசா! நீள் 33

நீளும் இயல்புடையாய்! நித்தமும் காசியிலே
ஆளும் விசுவேசா! ஆதரிப்பாய் - நாளும்
திருப்புகழைப் பாடி இராமேசா! தேசத்
தெருவழியே வந்துற்றோம் தேர். 34

தேரும் இயல்புடையாய்! தேசமெலாம் கொண்டாடும்
ஊராம் வடகாசி உள்ளவனே! - நீரும்
அடிவருடிப் பாடும் அரியரா மேசா!
தொடிவளையா ளோடிங்கே தோன்று 35

தோன்றும் நினைவாலே காசிக்கு நாங்களெலாம்
ஆன்ற அடிவைத்தோம் ஆதரிப்பாய் - ஈன்றவனே
அய்யா இராமேசா! யாத்திரையில் முன்னின்று
மெய்யாய் நிறைவேற்று மேல். 36

மேலான தேவர்க்கும் மேலான தெய்வமே!
நூலெல்லாம் போற்றும் நுதல் ஈசா! - காலாலே
நித்தம் நடக்கின்றோம்; நீரும் நிழல் எல்லாம்
உத்தமமாய் ராமேசா! உண்டு 37

உண்டதெலாம் கங்கேசா! உன்னருளால் வாழ்நாளில்
கண்டதெலாம் விஸ்வேசா காசிநகர் - தெண்டிரைகள்
பாடும் தமிழ்நாட்டுப் பர்வத வர்த்தினியே!
நாடு செழித்திடவே நல்கு 38

நல்கும் வளங்கள் நடையாத் திரையாலே
பல்க அருள்வாய் பரமேசா! - வெல்க
என எம்மைக் காசி நகர்க்கனுப்பி வைத்தான்.
தனம்கொள்ரா மேசன் தவம் 39

தவங்கள் மிகவே தலயாத் திரையாய்க்
கவன முடன் வந்தோம் காசி - புவனம்
செழிக்க மழையீந்து தென்கோடி ஈசா!
கொழிக்க உணவு கொடு 40

கொடுத்த தனைத்திலும் காசி நடக்க
விடுத்த தவம்நிறை வேற்றே - எடுத்த
செயலை முடிக்கத் திருராம நாதா!
வயலாய் நிழல்நீராய் வா. 41

வந்த துயரை வழியெல்லாம் போக்கியே
கந்தனாய்க் காத்திட்ட கங்கேசா! - பந்தமுடன்
ஒன்றே உணர்வாய் உவகையுடன் வந்தோம்யாம்
நன்றேரா மேசா! நடத்து 42

நடத்தும் பெருவேள்வி நாயகனே! கங்கை
இடத்தும் பெருங்காதல் ஈசா! - தடத்தினிலே
அன்பாய் நடக்கும் அனைவர்க்கும் ராமேசா!
பண்பாய் அருள்க பரிந்து 43

பரிந்தெம்மைக் காக்கும் பரமேசா! காசி
தெரிந்தெம்மை ஈர்த்ததனால் சேர்ந்தோம் - அறிந்தெம்மை
வெல்க என விடுத்த ராமேசா! பாதையெலாம்
அல்லல் களைவாய் அறிந்து 44

அறிந்து நடையாத் திரைசெய்யக் காசி
தெரிந்தோம் விசுவேசா! தேனே - விரிந்த
குணமெல்லாம் பெற்றோமே கோடிக் கரையாய்
கணமெல்லாம் நீ இருக்கக் கண்டு 45

கண்ட படிவாழும் காசினியில் விஸ்வேசா!
கண்டு முதலானோம் கால்நடையாய் - பண்டுமுதல்
எம்மைக் கருணையினால் ஈர்த்த ரா மேசா
இம்மையிலே காக்க இனிது 46

இனிதான காசி எழில்யாத் திரைக்குக்
கனிவாய் அழைத்தகங் கேசா! - துணிவாய்
நடந்தோமே எங்கள் நலம்காத் தருள
நடந்துவா ராமேசா நன்று 47

நன்று புரிந்தே நடமாடும் தெய்வத்தைக்
கண்டு வரவந்தோம் காசிநகர் - என்றென்றும்
உள்ளத்தில் உள்ள உயர்ராம நாதா நீ
கொள்ள வருவாய் கொழித்து 48

கொழித்த மணலும் குளிரும் புனலும்
களித்துக் கவிபாடும் காசி - செழித்த
உளத்தாலே செய்யும் உயர்யாத் திரையில்
நலத்தை இராமேசா நாட்டு 49

நாட்டின் நலமும் நகரத்தார் நல்வளமும்
காட்டி வளர்க்கின்ற கங்கேசா ! - வீட்டில்
எழுந்தருளிக் காக்கும் இராமேசா ! எங்கும்
கலந்தருளிக் காப்பாய் களித்து 50

களித்த உணர்வாலே காசிக்கு வந்தோம்
அளித்த வரங்கள் அனந்தம் - பலித்த
இனிய கனவை நனவாக்கும் கோடிக்
கனிராம நாதன் கழல் 51

கழலீந்து மார்க்கண்டன் கற்பாந்த காலம்
வளவாழ்வு வாழவரம் ஈந்தோய்! - உளமாரத்
தென்கோடி தொட்டு நடக்கின்றோம் ராமேசா!
இன்புடன் எம் யாகத்தை ஏற்று 52

ஏற்ற நடையால் எழிற்காசி விஸ்வேசா!
ஆற்றுப் படையாய்! அடிபணிந்தோம் - சாற்றும்
தமிழ்மாலை ஏற்கும் தலைவ! ரா மேசா!
அமிழ்தமென எங்களையும் ஆக்கு 53

ஆக்கிப் படைத்தவனே! அண்டங்கள் அத்தனையும்
ஊக்கி உணர்வூட்டும் விஸ்வேசா! - நாக்கில்
தினந்தோறும் உன்நாமம் திவ்ய மொழியே
மனமெல்லாம் ராமேசன் மாட்டு 54

மாட்டில் எழுந்தருளும் மாண்புடையாய்! விஸ்வேசா!
காட்டில் நடந்தோமே கால்நடையாய் - நாட்டின்
ஒருமையினைக் காக்கும் உயர்ராம நாதா!
பெருமையினைத் தந்திடவே பேசு 55

பேசும் உரையெல்லாம் பேசாமல் ஏற்றருளும்
காசி விசுவேசா! காத்தருள்க - தூசிக்கும்
கீழான எங்களைக் கீழ்க்கடலோய்! ராமேசா!
மேலாக்கி மேன்மைமெரு கூட்டு 56

கூட்டும் அடியார்கள் கோடியிலே எங்களையும்
நாட்டும் விசுவேசா! நன்மைதா - ஊட்டும்
விதியால் நடக்கின்றோம் வெற்றியெலாம் ஈயும்
பதிராம நாதன் பதம் 57

பதமே துணையாகப் பண்புடைய காசி
சதமே எனவந்தோம் சால்பாய் - நிதமும்
உளத்திருந்து காக்கும் உயர்ராம நாதன்
களத்திருந்து செய்வானே காப்பு 58

காப்புப் புகழுடைய கங்கைக்கு நாயகனே!
தோப்பாய் இருந்து துணைசெய்த - யாப்பால்
பருவத வர்த்தினியே! பாடி நடந்தோம்
அருகிருந்தே தாயே! அணை 59

அணைக்கும் விசாலாட்சி அன்னையே! உன்னை
நினைத்து வருகின்றோம் நித்தம் - கனைக்கும்
கடல்சூழும் ராமேஸ் வரநாத! எங்கள்
உடல் உடைமை காப்பாய் உயிர் 60

உயிரே! விசுவேசா! உன்னடியைக் காண
வெயிலில் அடிநடந்து வந்தோம் - துயிலும்
புறங்காட்ட உன்றன் புகழ்பாடு கின்றோம்
அறங்காட்டும் ராமேசா! ஆற்று 61

ஆற்றுப் படையாய்! அருள்கங்கை விஸ்வேசா!
ஆற்றுப் படையால் அடிநடந்தோம் - ஏற்றமெலாம்
தந்து புறங்காக்கும் தன்னிகரில் ராமேசா!
வந்தெங்கள் நன்மை வளர். 62

வளரும் பருவத்தில் வண்காசி ஈசா!
தளராமல் வந்தோம் தலைவா! - உளறாமல்
உன்னடியே பாட உதவிடுக ராமேசா!
பொன்னடிஎம் நெஞ்சினிலே பூத்து 63

பூத்துக் குலுங்கும் புவனத்தில் உன்னடியில்
காத்துக் கிடக்கின்றோம் கங்கேசா - ஏத்தும்
அருந்தமிழால் சொன்னோம் அலைகடல்ரா மேசா!
அருந்துகின்ற நீராய்நீ ஆகு 64

ஆகும் பொருளெல்லாம் ஆண்டவனே! கங்கேசா!
வாகாய் அளித்துநீ வாழ்விப்பாய் - ஏகும்
இடமெல்லாம் வந்தே இராமேசா! என்றும்
திடமாகத் தந்திடுவாய் தெம்பு 65

தெம்பு குறையாமல் தெண்டனிடக் காசிக்குக்
கம்பின்றி வந்தோமே கங்கேசா! - தும்பையெனும்
உள்ளத்தில் வைத்தோம் உயர்ராம நாதநின்
வெள்ளம்போல் வென்றிடுக வேல் 66

வேலின் துணையாலே வெற்றியுடன் காசிக்குப்
பாலாய் நடந்தோம் பரமேசா! - தாலாய்
இனிய தமிழ்சொன்னோம் ராமேசா! என்றும்
கனியாய் வருமுன்னைக் கண்டு. 67

கண்டு களித்தே கழல்தொழவே காசிக்குப்
பண்டுமுதல் வந்தோம் பரமேசா! - உண்டு
தினம்உறங்கும் வையத்தில் தீத்தமிழ்ரா மேசா!
மனந்தனிலே தங்கு மகிழ்ந்து 68

மகிழ்ந்து வடகாசி மண்ணைத் தொழவே
புகழ்ந்து புறப்பட்டோம் பொன்னே! - அகழ்ந்த
நிலம்தாங்கும் தன்மைபோல் நீள்கடல்ரா மேசா!
தலமெல்லாம் நீவந்து தாங்கு. 69

தாங்கும் கரமுடையாய்! தங்கநிறக் கங்கைமுடி
தாங்கும் திறமுடையாய்! சர்வேசா! - மங்கைமகிழ்
பாகம் உடையாய்! பரமேசா! பக்தியெனும்
தாகம்ரா மேசன் தனம் 70

தனமே வடகாசி தன்னிகரில் ஈசன்
இனமே நமதாய் எழுந்தோம் - மனமே
சிறிதும் தளராதே ராமேசன் பாதம்
குறியாய்த் தினம் எண்ணிக் கொண்டு 71

கொண்ட பெருங் கொள்கை வெற்றி பெறக் கங்கேசா!
அண்டை இருந்தேநீ ஆதரித்தாய் - பண்டைநாட்
கால்நடையாய்ச் செல்ல இராமேசா! கைகாட்டி
வாழ்நாளில் தந்தாய் வரம். 72

வரங்கள் பலகோடி வாய்த்ததனால் காசிக்
குரமாய் நடக்கின்றோம் ஈசா! - திறமாய்
இராமேஸ் வரம்தொட்டுக் காசி நகர்க்கும்
இராமேசன் தீர்த்தான் இடர் 73

இடரேதும் வாராமல் எந்நாளும் காத்த
சுடரே! வடகாசிச் சோதி - நடமாடச்
சக்தியினைத் தந்த சதுர்மறையோய்! ராமேசா!
பக்தியினால் கண்டோம் பதம் 74

பதமாய் இருக்கின்ற பான்மையினால் காசி
சதமாய் வருகின்றோம் சாறாய்! - மதத்தால்
உலகம் அழியாமல் ஒப்பில்ரா மேசா!
திலகமாய்க் காப்பாய் தினம் 75

தினமும் விசுவேசா! தீந்தமிழால் பாடிக்
கணமும் நடந்தோமே காலால் - மனமே!
பருவத வர்த்தினியே; ராமேசா! என்றே
உருவ வழிபாட்டில் ஊறு 76

ஊறும் கவியெல்லாம் உன்னடிக்கே விஸ்வேசா!
பாரும் மணக்கப் படைக்கின்றோம் - மீறும்
துயரங்கள் நீக்கித் துணை செய்ரா மேசா!
நயமாகச் செவ்வாய் நலம் 77

நலங்கள் பலவாக நாள்தோறும் ஈந்து
தலங்கள் தொழச்செய்விஸ் வேசா! - கலங்கள்
கரையேறச் செய்யும் கலங்கரைரா மேசா!
குறையின்றிக் காப்பாய் குணம் 78

குணமே உருவான கூட்டத்தில் என்னை
மணமாய் அமைத்தவிஸ் வேசா! - கணமும்
பிரியாமல் காத்த இராமேசா! என்றும்
சரியாமல் காப்பாய் சதம். 79

சதமே வடகாசி சர்வேசா! உன்றன்
பதமே சரணமெனப் பார்த்தோம் - நிதமும்
உடன்வந்தே காத்த இராமேசா! உன்றன்
இடம் வந்தோம் யாதிதற்கே ஈடு? 80

ஈடும் இணையுமிலா ஏந்தால்! எழிற்காசி
நீடு புகழ்கின்ற நிர்மலா! - பாடு
படுகின்ற மக்கள் பலம்பெறரா மேசா!
கொடுமையினைத் தீர்ப்பாய் குறித்து 81

குறித்த தலமெல்லாம் கும்பிடவே கண்காட்டி
விரித்த அருளாய்! விஸ்வேசா - சிரித்த
மனிதரெலாம் போற்ற மகத்துவமே ஈந்தாய்
கனியேரா மேசாநீ காத்து 82

காத்துக் கிடந்தோம் பலகாலம் இன்றைக்குப்
பார்த்து மகிழ்ந்தோம் பரமேசா! - ஈர்த்ததனால்
எட்டிரு நூறான மைல் நடந்தோம் ராமேசா!
இட்டமுடன் காத்தாய் இசைந்து 83

இசைந்த உணர்வாலே எங்களையும் காத்துத்
திசைகாட்டி ஈர்த்தவிஸ் வேசா! - விசையாய்
நடக்க அருள்புரிந்த நாயகரா மேசா!
கடக்க அருள் புரிவாய் கண்டு. 84

கண்டு முதலானோம் காசிக்கு வந்ததனால்
தொண்டர் உளம் வந்தோம் விஸ்வேசா! - உண்ட
உணவோடு நீரெல்லாம் உன்கொடைரா மேசா!
குணமாகக் காத்தாயே கூர்ந்து 85

கூர்ந்து கவனித்தாய் கொள்கலமே! விஸ்வேசா!
தேர்ந்து வரவழைத்தாய் தேசமுனை - நேர்ந்து
மனம்கொண்ட தாலே நடந்தோம்ரா மேசா!
தனம் தந்து காப்பாய் தழைத்து 86

தழைத்துப் பயிர் வளரும் தன்னிகரில் கங்கை
விளைத்துப் பொருள்சேர்விஸ் வேசா! - அழைத்ததனால்
எண்ணி நடந்தோம்நாள் நூற்றுப் பதினாறில்
கண்ணியமாய் ராமேசன் காத்து 87

காத்தவனே! எங்கள் கனதனமே! காசியிலே
பூத்தவனே! கங்கை நதிப் புத்தமுதே! - தோத்திரங்கள்
பாடிப் பரவுகிறோம் பார் புகழும் ராமேசா!
கோடிப் பெருமை கொடு. 88

கொடுத்துப் புகழ்கொள் குவலயத்தில் கங்கை
விடுத்துப் புகழ்கொள்விஸ் வேசா! - எடுத்த
நடையாத் திரையை நளினமுடன் ஏற்ற
விடையோய்! இராமேசா! வெல் 89

வெல்லும் பணிகாட்டி வீரம் துணிவூட்டி
ஓவ்லும் வகைகாத்த விஸ்வேசா! - அல்லும்
பகலும் உறங்காமல் பாதம் பணிந்தோம்
பகவானே ராமேசா! பார்த்து 90

பார்த்து நடந்தோம் பரமேசா! காசிக்கே
ஈர்த்தெம்மை ஆண்ட எழில் உருவே! - நேர்த்தியாய்
எங்கள் வினையை இனிதாய் முடித்திட்டாய்
தங்கமாய் ராமேசா தந்து 91

தந்த பெரும்பேற்றில் தன்னிகரில் கங்கைக்கு
வந்த பெரும்பேறே வாய்மையாம் - சிந்தாமல்
எல்லா நலத்தும்ரா மேசா! எமைக்காத்து
வல்லாங்கு தந்திட்டாய் வாழ்த்து 92

வாழ்த்தும் உளங்களினால் வந்திட்டோம் கங்கேசா!
ஆழ்த்தும் இடர்கள் அகற்றிடுக - வீழ்த்தும்
கொடியோர்கள் வீழக் குணமிகரா மேசா!
அடியார்கள் மேம்படஆள் வாய் 93

வாயுன் புகழ்பாடப் பாதம் உனைநாட
ஓயாமல் வந்தோமே கங்கேசா - சாயாமல்
காத்து நடப்பித்த ராமேசா! உன்னடியில்
கோத்துக் கிடக்கஅருள் கூர் 94

கூரும் திருவருளால் காசிக்கு வந்துற்றோம்
நீரும் மணக்கின்ற நிர்மலனே! - பாரும்
வியக்கப் பெருவெற்றி ஈந்தரா மேசா!
தயக்க மின்றித்தா தாள் 95

தாள்கள் தொழவே தலைவணங்கிக் காசிக்கு
நாள்கள் பலவாய் நடந்தோமே - வேள்முருகன்
கூர்வேல் வழிகாட்டக் கும்பிட்டோம் ராமேசா!
பார்போற்ற ஈவாய் பரிசு 96

பரிசு பலதந்து பாலித்த காசி
விரிநிழலே! விஸ்வேசா! வேந்தே! - உரிமையுடன்
பக்கத் திருந்து பணிசெய்த ராமேசா!
எக்காலும் காத்திடுக ஏற்று 97

ஏற்ற பெருங்கருணை விஸ்வேசா! இவ்வுலகில்
தோற்றம் புகழ்க்குத் துணைவருக - மாற்றங்கள்
காலம் நிகழ்த்திடினும் கண்கண்ட ராமேசா!
சீலம் தவறாமல் செய் 98

செய்யும் பணிகள் சிறப்புறவே விஸ்வேசா!
பெய்யும் மழையாய்ப் பிணித்திடுக - உய்யும்
வழிகாட்டி எம்மை வளர்ராம நாத!
விழிகாட்டிச் சேர்த்திடுக வீறு. 99

வீறு கொடுத்தாய் விசுவேசா! வெற்றியெலாம்
நீறு கொடுத்து நிருபித்தாய் - ஆறுமகிழ்
உச்சிச் சடைமுடியாய்! ஒப்பில்லா ராமேசா!
மெச்சிப் புகழ்தருவாய் மேல் 100

மேலான காசி விசுவேசா! நெஞ்சத்தில்
நூலாக நின்று நுகர்விப்பாய் - பாலாக
ஆக்கும் இராமேசா! அன்னை மலையரசி
பூக்கும் புகழே புகழ் 101

- முற்றும் -





"பொற்கிழிக் கவிஞர்" "காசிஸ்ரீ"

அரு. சோமசுந்தரன் (அருசோ) M.A.,B.T

சிறந்த கவிஞர்; 15,000க்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியவர். நூறு நூல்களுக்கு ஆசிரியர். கவிதை, கட்டுரை, இலக்கியத் திறனாய்வு, நாடகம், மொழிபெயர்ப்பு, பயணம், ஆன்மீகம் என்று பலதுறைகளில் வல்லுநர். ஆகவே இவருக்குப் "பல்துறைச் செந்நாப் பாவலர்", "கவிஞர்கோ" என்ற பட்டங்களையும், தங்கப் பதக்கத்தையும் வழங்கித் தவத்திரு குன்றக்குடி அடிகளார் சிறப்பித்தார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தமிழக அரசின் சார்பில் நடத்தப்பெற்ற பொற்கிழிக் காவியப் போட்டியில் முதல் பரிசுபெற்று, முதற்பொற்கிழியினைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம் இருந்து பெற்றார்.

இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரையாக நடந்துசென்று இந்த நூற்றாண்டில் மாபெரும் ஆன்மீகச் சாதனை நிகழ்த்திக் காசிவிஸ்வநாதர் கோவிலில் "காசிஸ்ரீ" பட்டம் பெற்றார்.

தமிழக முதல்வர்களான காமராஜ், பக்தவத்சலம், கலைஞர் மு. கருணாநிதி, எம்.ஜி.ஆர்., வி.என். ஜானகி, கவர்னர் கொரானா மற்றும் சி. சுப்பிரமணியம், நெடுஞ்செழியன் ஆகியோரால் பாராட்டப்பெற்று எல்லா அரசுகளாலும் சிறப்பிக்கப்பெற்றவர்.

இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், பாகவதம், சிலப்பதிகாரம், விஷ்ணுபுராணம், சிவமகாபுராணம், நாரதபுராணம் முதலிய ஆன்மீகச் செல்வங்களைத் தொடர்சொற்பொழிவாக ஆற்றி மக்களை நன்னெறிப்படுத்துகிறார். இவரது பணிகள் எல்லையற்றவை. பரப்பளவு விரிவானது. உலகம் சுற்றிய தமிழர். பல குருபீடங்களின் உத்தம சீடர்.